Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C.191/2021** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW5** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | மணிகண்டன் |
| Father/Husband Name | : | ராஜேந்திரன் |
| Village | : | சேதுபதி நகர், நாகாச்சி |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | கட்டிட மேஸ்திரி |
| Religion | : | |
| Age | : | 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.08.2025.

(எதிரி ஆஜர்.)

**முதன்மை விசாரணை:–**

நான் இராமநாதபுரம் தாலுகா நாகாச்சி சேதுபதி நகரில் குடியிருந்து கட்டிட மேஸ்திரி தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள எந்த கையெழுத்தும் என்னுடையது அல்ல. இந்த வழக்கில் இறந்துபோன சீனிவாசனை தெரியும். அவர் எந்த இடத்தில் இறந்தார் என்ற விவரம் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு என்ன தெரியும் என்றால் எனக்கு எதுவும் தெரியாது. என்னை போலிசார் விசாரிக்கவில்லை.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u> –

பனவாய்கூட்டம் சந்திரன் மகன் குமார் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். நடுவலசை பக்கத்தில் உள்ள புயல் காப்பகம் உள்ளது தெரியுமா என்றால் தெரியும். கடந்த 10.01.2020ம் தேதி காலை 06.00 மணிக்கு நானும், குமாரும் நடுவலசை பக்கத்தில் உள்ள புயல் காப்பகம் அருகே சென்றோம் என்றும், அப்போது உச்சிப்புளி காவல் ஆய்வாளர் அங்கு வந்து சீனிவாசன் என்பவர் இறந்த இடத்தை பார்வையிட்டு வரைபடமும், பார்வை மகஜரும் தயார் செய்தார் என்றும் அதற்கு நானும், குமாரும் கையெழுத்து போட்டோம் என்றால் சரியல்ல. மேலும் எங்கள் முன்னிலையில் காவல் ஆய்வாளர் மேற்படி இடத்தில் இரத்தம் படிந்த மண், இரத்தம் படியாத தார்கலவையுடன் கூடிய மண்ணை கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்தார் என்றும் அந்த அத்தாட்சியில் நானும், குமாரும் கையெழுத்து போட்டோம் என்றால் சரியல்ல. எதிரி என் ஊரை சேர்ந்தவர், என் சமூகத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். அதனால் எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க உச்சிப்புளி காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம், மகஜர் தயார் செய்தபோது அதற்கு சாட்சியாக கையெழுத்து செய்துவிட்டும், அதே இடத்தில் இரத்தம் படிந்த மற்றும் படியாத மண்களை கைப்பற்றும்போது அதற்கு சாட்சியாக அத்தாட்சியில் கையெழுத்து செய்துவிட்டும் தற்போது எதிரியை காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்து பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.